## பாடம் – 12

# பொருளாதார உலகமயமாக்கல்

## 12.1 முன்னுரை

உலகமயமாக்கல் என்ற சொல் உலகளவில் சமூகப் பொருளாதார வாணிப நடவடிக்கைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய சொல்லாகும். பன்னாட்டு அளவில் வாணிபத் தொடர்பை ஏற்படுத்தி சார்புடைய தன்மையை அதிகரிக்கச் செய்வதாகும். குறிப்பாகத் தாராளமயமாக்கல் கருத்தின் அடிப்படையில் வாணிபத்தில் சுதந்திரமான போக்கைக் கொண்டுவ்ர, உலகமயமாக்கல் கருத்தானது சுதந்திர வாணிபத்தைப் பரிந்துரை செய்தது.

மேலும், உலகமயமாக்கல் என்பது ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன், இடையூறுகள் இல்லாமல் வாணிபத்தின் மூலம் பொருட்களையும், பணிகளையும் சுதந்திரமான முறையில் பரிமாற்றம் செய்யப்படுதலாகும். தொழில் நுட்பங்கள், முதலீடு, உழைப்பு மற்றும் மனிதவளம் போன்றவைப் பரிமாற்றம் செய்யப்படுகிறது. சுருக்கமாக, உலகமயமாக்கல் என்பது தேசியப் பொருளாதாரம் விரிவடைகிறது என்று கூறலாம். பொருளாதார நடவடிக்கைகள் சிறந்தப் பொருளாதாரமாக மாறுகிறது. மேலும் அரசின் பேரியல் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. அதாவது உலகமயமாக்கல் என்பது பொருளாதார பரிமாணத்தையும் அதன் திறமையான மேலாண்மையும் அரசியல் எல்லை கோடுகளையும் தாண்டி உலகப் பொருளாதாரத்தோடு காணப்படுகிறது.

## 12.2 நோக்கங்கள்

இப்பாடத்தைப் பயின்ற பின்னர் உங்களால்,

- உலகமயமாக்கல் கருத்தை அறிய முடியும்
- உலகமயமாக்கலின் வரலாற்றை பின்புலத்தை ஆராய முடியும்.
- உலகமயமாக்குதலை நிர்ணயிக்கும் காரணிகளை சாதகமாக கருத்துகளைக் கூற முடியும்.
- உலகமயமாக்கல் இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ள விளைவுகளை விளக்க முடியும்.

Scanned with CamScanner

பாட அமைப்பு


12.1 முன்னுரை

12.2 நோக்கங்கள்

12.3 பாட அறிமுகம்

12.4 உலக மயமாக்கலின் – வரலாறு

12.5 உலகமயமாக்கல் – கருத்துகள்

12.6 உலகமயமாக்கல் – தோற்றத்திற்கான காரணிகள்

12.7 உலகமயமாக்கல் – தன்மைகள்

12.8 உலகமயமாக்கலுக்கு ஆதரவான கருத்துகள்

12.9 உலகமயமாக்கலுக்கு எதிரான கருத்துகள்

12.10 உலகமயமாக்கலும் இந்தியப் பொருளாதாரமும்

12.11 உலகமயமாக்கலில் கொள்கைகள் உருவாக்குதல்

12.12 தொகுப்புரை

12.13 தன்மதிப்பீட்டு விடைகள்

12.14 மாதிரி வினாக்கள்


## 12.3 பாட அறிமுகம்

உலகமயமாக்கல் கருத்தானது நான்கு உள்ளடக்கிகளைக் கொண்டு காணப்படுகிறது.

1. சுதந்திர வாணிபம் மூலம் பொருட்களும் பணிகளும் பரிமாற்றம் செய்தல்.
2. மக்கள் இடப்பெயர்வு (அ) மனிதவளம் இடப்பெயர்வு அடைந்து பொருளாதார மேம்பாட்டை உருவாக்குதல்.
3. மூலதன ஓட்டத்தை உருவாக்குதல்
4. தொழில் நுட்பத்தைக் கொணர்தல்.

இந்த மேற்கூறிய கருத்துகளை உள்ளடக்கியதே உலகமயமாக்கல் ஆகும்.

IMF கருத்துப்படி, "உலகமயமாக்கல் என்பது, வளரும் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்தோடு இணைத்துக் கொண்டு தனது வாணிப அளவை பெருமளவு அதிகரித்து பொருட்களையும் பணிகளையும் பரிமாற்றம் செய்து கொள்ளுதல். மேலும் பரந்து விரிந்த போதுமான தொழில் நுட்பத்தை பெறுதல் என்பதாகும்." சிட்டிகிலிட்ஸ் கருத்துப்படி, "உலகமயமாக்கல் என்பது, நாட்டையும், நாட்டுமக்களையும் உலகத்தோடு நெருக்கமான முறையில் இணைப்பதாகும். அதாவது போக்குவரத்து, செய்தித் தொடர்பு, போன்ற செலவுகளைக் குறைத்து அதிகப்படியான முறையில் பண்டங்களையும், பணிகளையும் இடப்பெயர்வு செய்தல், மூலதனம் திறமையான தொழில் நுட்பம் எளிதில் பெறுதல் போன்றவையாகும்."



Scanned with CamScanner

தீபக் நாயர் கருத்துப்படி," உலகமயமாக்கல் என்பது உலக நாடுகளின் அழுத்தமான கூட்டு முயற்சியில் தங்களது பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்வது மற்றும் அதிகப்படியான சுதந்திரம், வளரும் பொருளாதார உட்தொடர்புகள், ஆழமான பொருளாதார தொடர்புகளை உள்ளடக்கியது.

உலக வங்கியின் கருத்துப்படி, "உலகமயமாக்கல்" என்பது தனிநபர்களின் சுதந்திரத்தையும், திறமையையும் வெளிப்படுத்த வழி செய்கிறது. மேலும் தனி நிறுவனங்களில் செயல்பாட்டை முழுமைப்படுத்தவும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கச் செய்கிறது.

ரூபின்ஸ் ரிகுபெர்ரோ "கருத்துப்படி", உலகமயமாக்கல் என்பது ஒரு பொருளாதாரம் உலகப்பொருளாதாரத்தோடு இணைய மூன்று காரணிகள் காரணமாகிறது". அவை;

1. வாணிபத்தை அதிகரித்து பொருட்களையும் பணிகளையும் பெறுதல்.
2. நிறுவனங்களின் முதலீட்டை அதிகரித்தல் மக்களின் இயல்பையும் தன்மைகளையும் மாற்றுதல், தேசிய உற்பத்தியை அதிகரித்தல்.
3. பன்னாட்டு நிதி வளங்களைப் பெறுதல் பரிமாற்ற விதத்தில் உள்ள சிக்கலைக் குறைத்தல்.

ஜெகதீஸ் பகவதி கருத்துப்படி பொருளாதார உலகமயமாக்கல் என்பது நாட்டுப் பொருளாதாரத்தை உலகபொருளாதாரத்தோடு இணைப்பதாகும். அதாவது இது பன்னாட்டு வாணிபத்தால் மட்டுமின்றி, அன்னிய நேரடி முதலீடு, அன்னிய நிறுவனங்களின் பங்களிப்பு MNC, போன்றவைகள் மேற்கொள்கின்ற குறுகியகால முதலீட்டு ஓட்டம், மற்றும் பன்னாட்டு, அளவில் தொழில் நுட்ப செறிவை இடப்பெயர்வு செய்வதாகும்."

உலகமயமாக்கல் என்பது சிறப்பான மேலாண்மை மற்றும் அங்காடியிடல், பன்னாட்டு அளவில் நுகர்வு பொருட்களை இடப்பெயர்வு செய்தல், உதாரணமாக கார், சோப்புகள், உணவுப் பொருட்கள், போன்றவை பன்னாட்டு நுகர்வோரின் தேவையைப் பூர்த்திச் செய்கிறது. MNC, மூலம் பல்வேறு கலாச்சாரங்கள் ஒன்று கலக்கிறது. மென்பொருள் துறையில் உலகமயமாக்கல் பெரும்பங்கு வகிக்கிறது. ஏனெனில் தொழில் மயமாக்கலில் புதியத் தொழில் நுட்பம் இடம் பெறுகிறது. இது பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துகிறது. ரோலன்ட் ரோபர்ட்சன் கருத்துப்படி, " உலகமயமாக்கல் என்பது உலகம் முழுமையும் ஒன்றுபடுத்துகிற கருத்தாக உள்ளது என்கிறார்.

## உலகமயமாக்கல் – விளக்கம்

சேம்பரின் கருத்துப்படி, "உலகமயமாக்கலை உருவாக்குதல் அதாவது உலகளாவிய அளவில் மொத்த மக்களின் தேவைகளையும் சிறப்பான முறையில் எடுத்துக்கொண்டு செயல்படுகிறது". நாட்டுப் பொருளாதாரத்தை உலகப்பொருளாதாரத்தோடு இணைப்பதாகும். உலகமயமாக்குவதால் பன்னாட்டு அங்காடியில் பொருட்கள், பணிகள், தொழில் நுட்பம், மேலும் நிதி மற்றும் உழைப்பாளர்கள் அணைத்தும் ஒருங்கிணைந்தலாகும். ஆகவே உலகமயமாக்கல் என்ற சொல் உள்ளடக்கி இருப்பனவை :

Scanned with CamScanner

1. வாணிபத்தில் உள்ள தடைகளை விலக்குதல், சுதந்திரமான முறையில் பொருட்கள் பணிகள் ஆகியவை ஒரு நாட்டினுள்ளும், நாடுகளிடையேயும் பரிமாற்றம் செய்தல்.

2. சுதந்திரமான முறையில் மூலதனம் செயல்பட ஒரு சுற்றுச்சூழலை உருவாக்குதல்.

3. சுதந்திரப் போக்கானத் தொழில் நுட்ப வளர்ச்சியை அதிகரிக்க சூழ்நிலையை உருவாக்குதல்.

4. மக்கள் தொகை அதிகம் உள்ள நாடுகளில் அதிக உழைப்பாளரை இடப்பெயர்வு செய்ய அனுமதிக்கப்படுதல். இதனால் உழைப்பாளர்கள் தேவையில் தன்னிறைவு அடைதல்.

## 12.4 உலகமயமாக்கல் – வரலாறு

"உலகமயமாக்கல்" என்ற சொல் நுணுக்கமான மற்றும் அரசியல் சார்ந்த இரு வேவ்வேறு வரலாற்றுப் பின்னனியைக் கொண்டது. பொதுவாக உலகமயமாக்கலின் வரலாறு வாணிப நடவடிக்கையை ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டின் நிலையான அமைப்பிற்கும் உள்ள தொடர்பை அதிகப்படுத்தியும் பண்டமாற்று முறையில் உள்ள இடர்களைக் குறைப்பது ஆகும்.

"தாரளமயமாக்கல்" என்ற சொல் தடையில்லா பொருளாதாரக் கோட்பாடுகளையும், பண்ட மாற்று முறையில் உள்ள கட்டுப்பாடுகளையும் களைவதே ஆகும். இதனால் ஒரு நாட்டின், வாணிபம், தனித்திறமை, பாதுகாப்பான வரிகள், மற்றும் வாணிப நடவடிக்கைகளையும் அதிகப்படுத்த முடிகிறது.

19 ஆம் நூற்றாண்டில் "தாராளமயமாக்கல்" கால கட்டத்தில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த கருத்தாக இருந்தது. மேலும் இதை உலகமயமாக்கலின் முதல் பகுதியாக காணப்பட்டது. இதனால் தொழில்மயமாதல் அதிக வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள வழிவகை செய்தது. இதனை கோட்பாடு அடிப்படையில் விளக்கலாம். ரிக்கார் டோவின் கோட்பாட்டின்படி "ஒப்பீட்டு நன்மை கோட்பாட்டின்" மூலமும், சேவின் "பொதுச்சமநிலை கோட்பாடு" மூலமும் ஒரு நாடு வாணிபத்தில், விளைவுள்ள வாணிபம் மேற்கொள்வதற்கான அடிப்படையை விளக்குகிறது. இதில் ஏதேனும் இடையூறுகள் அளிப்பிலோ, தேவையிலோ ஏற்பட்டால் எளிதில் அதைத் தானே சரிசெய்து கொள்கிறது என விளக்கப்படுகிறது. (1850 மற்றும் 1880 களில்) பொன் தர திட்டமானது பெரிய அளவில் தொழில் மயமாக வித்திட்டது, ஆனால் பொன் திட்டத்தின் விளைவால் பல நாடுகள் இதற்கான கருத்து பரிமாற்றத்திலேயே இருந்தது.

உலகமயமாக்கலில் முதற்படி முதல் உலகப் போரின் ஆரம்பத்தில் தகர்க்கப்பட்டது. மேலும் பொன் திட்டத்தினால் ஏற்பட்ட சிக்கலின் காரணமாகவும் 1920 இல் இருந்து 1930 வரை குழப்பங்கள் காணப்பட்டது. இதற்குப் பின்னால் உலக நாடுகள் உலக மயமாக்கல் கருத்தை ஏற்றுக் கொண்டது. ஐரோபிய மற்றும் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட சமமின்மையைச் சரிசெய்யத் திட்டம் தீட்டியது.

Scanned with CamScanner

மேலும் பொருட்கள், மூலதனம், உழைப்பு போன்ற உற்பத்தி காரணிகளைச் சுதந்திரமாக நாடுகளுக்கு இடையில் பரிமாறிக்கொள்ள இது வழி செய்கிறது. முதல் உலகப்போர், மற்றும் இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்க "பிரிட்டன் உட்ஸ் நிறுவனமான IMF" மற்றும் GAAT (காட்) உருவாக்கப்பட்டது.

வாணிப ஒப்பந்தம் மறுபரிசீலனைச் செய்யப்பட்டது. இரண்டாவது உலகப் போருக்கு பின் பன்னாட்டு பொருளாதார நிறுவனங்கள், மறுசீரமைப்பு, பன்னாட்டு வாணிபம் ஆகியவை விரிவுபடுத்த துரிதப்படுத்தப்பட்டது. 1970களில் இந்த விரிவு படுத்தப்பட்ட வாணிபத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 12.5 உலகமயமாக்கல் – கருத்துகள்

உலகளவில் உலகமயமாக்கள் கருத்தானது உலகமும் – நாடுகளும் ஒன்றிணைந்ததைக் காட்டுகிறது. இது WTO கூட்டு அறிக்கையால் ஏற்பட்டதாகும். தொன்மை வாதிகளின் கருத்தானது "ஒப்பீட்டுச் செலவு நன்மை கோட்பாடு" என்ற புதிய பரிமாணம் உருவாக்க அடிப்படையாக அமைந்தது. இந்தக் கருத்தைப் பரவச் செய்வது, கோட்பாடுகளின் படி அடித்தளம் அமைத்து தடையில்லா வாணிப நடவடிக்கைகளைப் பிரிட்டனிலிருந்து வளர்ச்சிக் குன்றிய நாடுகளுக்கு, அதாவது அதன் காலணி ஆதிக்க நாடுகளில் பரவச் செய்தனர்.

உலகமயமாக்கல் கருத்தானது பெரும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. ஏனெனில் இந்தக் கருத்தை நடைமுறைப்படுத்தினால் மக்கள் ஏற்க வேண்டும். அதாவது உலகமயமாக்கல் என்பது பன்னாட்டு நிறுவனங்களை வாணிபத்தில் ஈடுபடுத்தப்படுகிறது. இந்த உலகமயமாக்கல் மக்கள் அதன் செயல்பாட்டில் இருப்பதை நம்ப, பன்னாட்டு வாணிபமும் பன்னாட்டு நிறுவனமும் அதன் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்த வேண்டும். இதன் அடிப்படையில் 18, 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் பொருளாதாரமும், தொழில் நுட்பமும் அந்நிய ஆட்சியில் இருந்த நாடுகளில் அமுலாக்கப்பட்டது. ஏனெனில் இது சர்வாதிகார நிலையில் நிகழ்த்தப்பட்டது. வரலாற்று அடிப்படையில் பார்க்கும் போது காலனி நாடுகளில் உள்ள வளங்களை அதிகார நாடுகள் சுரண்டி தங்களை உலகமயமாக்கலின் மூலம் மேம்படுத்திக் கொண்டது என்பதை அறிந்து கொள்ளலாம். இதனாலே அந்த நாடுகள் தொடர்ந்து வறுமையிலும், மந்த நிலையிலும் தேக்கநிலையிலும் உள்ளது. இதன் காரணமாகவே பல அறிஞர்கள் "உலகமயமாக்கல்" என்பதை விட பன்னாட்டுமயமாக்கல் என்பது பொருத்தமாகும் என்பதாகும். நாடுகளின் மற்றும் தேசங்களின் பங்கு பன்னாட்டுமயமாக்களில் அதிகமாகவும் உலகமயமாக்கல்களில் இவற்றின் செயலாக்கம் இல்லாமலும் வழி செய்கிறது.

Scanned with CamScanner

## 12.6 உலகமயமாக்கல் – தோற்றத்திற்கான காரணிகள்

கீழ்வரும் காரணிகள் உலகமயமாக்கல் தோன்றக் காரணிகளாக அமைகின்றன.

1) நாடுகளுக்கு இடையில் ஒத்த தன்மையின் காரணமாக அதாவது அதிகக் கட்டுமானங்கள் பகிர்ந்தளிப்பு முறை சந்தை அணுகுமுறைகள் ஆகியவற்றின் ஒத்த கருத்தின் காரணமாகவும்,

2) நாட்டின் மூலதன அங்காடி உலக மூலதன அங்காடிக்கு ஏற்ப வளர்ச்சியடைந்து இது அதிகளவு மூலதன ஓட்டம் நாடுகளுக்கு இடையில் காணப்பட்ட காரணத்தாலும்,

3) உலகளவில் போட்டி அதிகரிப்பதால் புதிய புதிய தொழில் நுட்பங்களில் புரட்சி காரணமாகவும், உதாரணமாக மென்பொருள் உற்பத்தி காரணமாகவும்.

4) அதிகப்பட்சத் தொழில் நுட்ப வளர்ச்சியால் செலவு மிகக் குறைந்து உற்பத்தி அதிகரித்து உலகளவில் நுகர்வோரை உருவாக்குவதன் காரணமாகவும்.

5) தொன்மைவாத நாடுகள் உலக நாடுகளுடன் போட்டியிட்டு வளர்வதனாலும்.

6) பின்தங்கிய நாடுகள் தங்களை வளர்த்துக் கொள்ள தாராளமயமாக்கல் கொள்கையை உருவாக்கி, பொருளாதார சீர்திருத்தம் மேற்கொண்டு, அன்னிய முதலீடுகளை கவர்ந்து உலகப் பொருளாதாரத்துடன் இணைந்து கொள்வதின் காரணமாகவும்,

7) உலக வாணிப நிறுவனங்கள் (MNC) தங்களது நிறுவனங்களை உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் நிறுவுகிறது. இதன்காரணமாக உலகம் முழுவதும் ஒரே நோக்கு நிகழ காரணமாகிறது.

8) உலக உற்பத்தியாளர்கள் குறைந்த செலவில் அதிகப் பயன்பாட்டைத் தரும் பொருட்களை எவ்வாறு திறமையாக உற்பத்தி செய்வது எனத் திட்டமிடுவதாலும்.

9) உலக உற்பத்தி நடவடிக்கையில் குறைந்தளவு உழைப்பாளரைப் பயன்படுத்தி அன்னிய போட்டிக்கு ஈடுகொடுக்கும் அளவில் தங்களை உருவாக்கி கொள்வதாலும்.

10) உலக நிறுவனங்கள் தங்களது உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை அடிப்படையில் மேற்கொள்வதால் தங்களது அங்கன்வாடியைத் தக்க வைத்து கொள்வதாலும்.

## 12.7 உலகமயமாக்கல் – தன்மைகள்

இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட பல்வேறு போக்குகளைக் கூர்ந்து கவனித்தால் உலகமயமாக்கல் பற்றி அறிந்து கொள்ளலாம். அதாவது பன்னாட்டு அளவில் பொருட்கள் பரிமாறப்பட்டது, பணம், செய்தித் தொடர்பு, மக்களின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், தொழில்நுட்ப மாற்றங்கள், அமைப்பு ரீதியில் ஏற்பட்ட மாற்றங்கள், மற்றும் அக்கட்டுமானங்களில் ஏற்பட்ட மாற்றங்களே உலகமயமாக்கல் ஆகும்.

Scanned with CamScanner

## 1. பொருளாதாரத் தன்மைகள்

1) பன்னாட்டு வாணிபம் அதிகரித்தது, அதாவது வளரும் நாடுகள் வளர்ந்த நாடுகளுக்கு தங்களது பொருளை ஏற்றுமதி செய்ய வகை செய்தது.

2) பன்னாட்டு முதலீட்டை அதிகப்படுத்தவும் மற்றும் அந்நிய நேரடி முதலீடுகளை அதிகப்படுத்தவும் வகை செய்கிறது. வளரும் நாடுகள் தங்களது மூலதனத்தை பன்னாட்டு கடன் மூலம் பெற்று வளருதல்.

3) உலகப் பொருளாதாரம் மிகவேகமாக வளருதல். வளரும் நாடுகளுக்கு புதிய புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்தி உற்பத்தி நடவடிக்கையைத் துரிதப்படுத்தி உற்பத்தியை அதிகரிக்கச் செய்து பன்னாட்டு தர உற்பத்திற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் மாற்றுதல்.

4) MNCயில் உலகப் பொருளாதாரத்தின் பங்கை அதிகப்படுத்தியும் வளரும் நாடுகளில் எந்தவித ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி செலவும் இன்றி நேரடியாகத் தொழில் நுட்பத்தைப் பெற்று வளரவும் உதவுகின்றது.

5) பன்னாட்டு நிதி நிறுவனத்தின் செயல்பாடுகளை அதிகப்படுத்துதல் அதுமட்டுமல்லாது, போக்குவரத்துச்செலவு, செய்தித் தொடர்புச் செலவு போன்றவைகள் குறைகின்றன. இதனால் தீர்வுகள் குறைகிறது. மேலும் அன்னிய வாணிபம் GDPயில் அதிகரிக்கிறது.

6) பன்னாட்டு ஒப்பந்தங்கள் மூலம் நாடுகளின் பொருளாதார எல்லை விரிவுபடுத்தப்படுகிறது அதாவது WTO மற்றும் IMF மூலமும் பொருளாதார ஒப்பந்தங்கள் மேற்கொண்டு பன்னாட்டு வாணிபத்தை மேற்கொள்கிறது.

7) பன்னாட்டு நிறுவனங்கள் (MNCs) அதிகளவு வளர்ச்சியடைந்துள்ளது.

8) வெளிவளம் (Outsource) எனப்படும் பொருளாதார நடைமுறையை பன்னாட்டு நிறுவன்ங்கள் அதிக அளவு வளர்ச்சியடையச் செய்துள்ளது.

## 2. கலாச்சாரத் தன்மைகள்

பன்னாட்டு கலாச்சாரங்கள் பரிமாறப்படுகிறது.

1) தனிமனிதன் விரும்பும் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ள பன்னாட்டு திரைப்படங்கள் மூலமும் பல்வேறு கலாச்சாரங்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மூலமும் உருவாகிறது.

2) மிகச் சுலபமாக உள்ளூர் கலாச்சாரம் மேற்கத்திய கலாச்சாரமாக உருவாகிறது.

3) பன்னாட்டு வாணிபம் அதாவது பயணம் மற்றும் சுற்றலாவால் உருவாகிறது.

4) அதிக அளவு குடியேற்ற போக்கு சட்ட விரோத குடியேற்றதை உருவாகிறது.

5) உணவு அடிப்படையிலும் பன்னாட்டு உணவுகளும் இந்திய உணவுகளும் பரிமாற்றம் செய்யப்படுகிறது.

Scanned with CamScanner

### 3. மற்றத் துறைகளில் ஏற்பட்ட நன்மைகள்

1) உலகளவில் தொலைத்தொடர்பு கட்டுமானங்கள் பெருமளவு வளர்ச்சியடைந்தது. இதனால் செய்திப் பரிமாற்றம் மிக எளிமையானது. உதாரணமாக, இண்டர்நெட், சேட்டிலைட், டெலிபோன் போன்றவற்றைக் கூறலாம்.

2) உலக வாணிபத்தில் நிலையான வசதிகள் உருவாக்கப்பட்டது, காப்பு உரிமம், பொருட்களுக்கான உரிமம் போன்றவை.

3) உலகளவில் நீதித்துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பன்னாட்டு அளவில் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கவும் தண்டனை வழங்கவும் வழி பெற்றுள்ளது.

4) உலகமயமாக்குவதால் பன்னாட்டு தீவிரவாதத்தை அடையாளம் கொள்ள முடிகிறது.

5) பொருட்களைச் சுதந்திர வாணிபம் செய்ய வழி வகுக்கிறது.

6) போக்குவரத்து செலவுகள் குறைக்கிறது. உள் நாட்டில் குறைந்த செலவில் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தப்படுகிறது.

## 12.8 உலகமயமாக்கலுக்கு ஆதாரவான கருத்துக்கள்

உலகமயமாக்கலுக்கு ஆதரவான சில கருத்துகள் கூறப்படுகிறது. அவை

1) உலகமயமாக்கல் இல்லை எனில் உள்நாட்டு தொழில்துறை பாதுகாப்பு நலிவடையும், இதன்காரணமாக செலவினங்கள் பெருமளவு பாதிப்படையும்.

2) பின்தங்கிய நாடுகளில் உலகமயமாக்கல் மூலம் வளங்களைத் திறமையாகப் பயன்படுத்தி மூலதன வெளியீட்டு அளவை அதிகரித்து உழைப்பாளரின் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது. இதன் ஏற்றுமதி அதிகரிக்கிறது. மேலும் மூலதன ஓட்டம் அதிகரித்து, தொழில் நுட்பம் மேம்பாடு போன்றவை ஏற்பட்டு சந்தைப் போட்டியினை அதிகப்படுத்திப் பொருளாதார வளர்ச்சி விதம் அதிகரிக்கிறது.

3) வணிப வீதத்தை வளர்ச்சியடைய செய்கிறது. சார்புடைய விலை அடிப்படையில் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி நடைபெறுகிறது.

4) உலகமயமாக்கல் அதிக மூலதன பற்றாக்குறை உள்ள நாடுகளில் உழைப்புச் செறிவு, தொழில் நுட்பத்தை அளிக்கிறது. இதனால் மொத்த வளங்கள் திறமையாகப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் ஏற்றுமதி அதிகரிக்கிறது.

அந்நிய முதலீடு அதிகரிப்பதால் ஏற்றுமதி தொழில் மேம்படுகிறது. அன்னிய நேரடி முதலீட்டால் புதிய தொழில் நுட்பம் பெறப்படுகிறது. இதனால் மூலதனச் செலவு குறைகிறது. அதிகப்படியான உழைப்பாளரையும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் அதிக லாபம் ஈட்டப்படுகிறது. உள்நாட்டு அங்காடியில் பன்னாட்டு நேரடி போட்டி ஏற்பட்டு, இறக்குமதி வரிகள் குறைக்கப்படுவதால், விலை குறைந்து தரம் அதிகரிக்கிறது.

Scanned with CamScanner

இறக்குமதி பதிலீடாகப் பொருட்களை உற்பத்தி செய்வது படிப்படியாக குறைந்து, விலை குறைவான மூலதனப் பொருட்கள் இறக்குமதி செய்வதால் மூலதன உற்பத்தி வீதம், குறைக்கப்படுகிறது. விலைக் குறைந்த உற்பத்திப் பொருட்கள் அதிகரிக்கப்பட்டுகிறது. வேளாண்மை மற்றும் தொழிலகங்களின் இடையேயான வாணிபத்தை அதிகப்படுத்துகிறது.

அன்னிய நேரடி முதலீட்டால் அது GDP யை வெகுவாக அதிகரிக்கச் செய்கிறது. அதிகரிக்கிறது. பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கிறது. இதன் மூலம் வங்கிகள் பன்னாட்டு வங்கிகளில் திறமையை அதிகப்படுத்தி அதிகளவு பன்னாட்டு வங்கிகள் திறப்பதற்கு வகை செய்கிறது.

## 12.9 உலகமயமாக்கலுக்கு எதிரான கருத்துகள்

உலகமயமாக்கலுக்கு கீழ்வரும் சில எதிரான கருத்துகள் நிலவுகின்றன அவை :

1) உலகமயமாக்கல் செயலால் அதிகப்படியான முதல் இடப்பெயர்வு அடைகிறது, வேகமான அங்காடி மேலாண்மை அங்காடியின் தேவை மற்றும் செயல்பாடுகள் சமூக மற்றும் அக்கட்டுமானப் பொருட்களில் அதிக அழுத்தம் ஏற்படுத்தப்படுகிறது. இது மனித சமூக செலவுகளை இரட்டிப்பாக்குகிறது. இதனால் சுதந்திர நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கிறது.

2) உலகமயமாக்கல் நடவடிக்கையால் உலக அளவில் பொருளாதார சக்தி அதிகரிக்கச் செய்கிறது.

3) உலகமயமாக்கல் மூலமாக அரசியல் மற்றும் பொருளாதாரச் சுதந்திரமும், முதலாளித்துவ வளர்ச்சி, உலக அரங்கில் அதிகச் சொத்துகளை ஈட்ட முடிகிறது. இதன் காரணமாக ஜனநாயக, முதலாளித்துவம் பயனடைய வகை செய்வதாக உலகமயமாக்கலின் ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

4) உலகம் இரண்டாம் போருக்கு பிறகு "வாழ்வியல்" (Life expeetening) வளர்ந்து வரும் நாடுகளில் அதிகரித்திருப்பதாகக் கருதுகின்றனர் மற்றும் குழந்தை இறப்பு வீதம் வளரும் நாடுகளில் குறைந்து இருக்கிறது. வருமான ஏற்றத்தாழ்வுகளும், உலகமயமாக்கலின் மூலம் குறைந்து காணப்படுவதாகக் கருதுகின்றனர்.

5) எல்லா நாடுகளிலும் ஜனநாயகம் அதிகரித்து இருப்பதாகக் கருதுகின்றனர்.

6) உலக கல்வியின் வீதம் 52 சதவீதத்திலிருந்து 81 சதவீதமாக 1950 – 1999 ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில் அதிகரித்துள்ளதாகக் கருதுகின்றனர். பெண் கல்வி 59 சதவீதமாக 1970 மற்றும் 1980க்குள் அதிகரித்துள்ளது.

Scanned with CamScanner

7) இதுபோல, மின்சார சக்தி, கார், வானொலி, தொலைபேசி, தொலைகாட்சி பெட்டி ஆகியவற்றை தனிமனிதர் உபயோகிப்போர் வீதம் அதிகரித்துள்ளது. அதுவும் 1950 மற்றும் 1999 இடைப்பட்ட காலத்தில் நடந்துள்ளதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

8) உலகமயமாக்கலின் ஆதரவாளர்கள் முதல்கட்ட உலகமயமாக்கல் அங்காடி சார்ந்த பொருளாதாரத்தை ஏற்படுத்தியதாகவும், உள்நாட்டு நுகர்வோர்களை உலக நுகர்வோர் மக்களாக மாற்றப்பட்டதாகவும் கருதுகின்றனர்.

9) அரசுகளின் சக்தி மறுபகிர்வு செய்யப்படுவதால் அரசியல் காரணிகள் பெரும் பாதிப்பை அடைகிறது.

10) உலகமயமாக்கலால் உலகத்தோடு நாட்டு பொருளாதாரம் இணைக்கப்படுவதில் தொடர்ச்சி அற்ற சூழல் நிலவுகின்றது. ஏனெனில் பல்வேறு நிறுவனங்கள் வருவதும் செல்வதும் என உள்ளன. இந்த மாற்றம் பொருளாதாரத்தின் நிலைத்தன்மையை பாதிக்கிறது.

11) உலகமயமாக்கலால் புதியத் தொழில் நுட்பம் பெறப்படும், அதனால் அதிக உற்பத்தியாற்றல் அதிக உழைப்பாளரைக் கொண்டு செயல்படும் என நம்பப்பட்டது. ஆனால் கடந்த பல ஆண்டுகளில் உலகமயமாக்கலால் புதியத் தொழில் நுட்பம் அதிக அளவு வேலையில்லா பிரச்சினையை அதிகரித்து உள்ளது என்பது கண்கூடானதாகும்.

12) பொருளாதாரத்தில் சுதந்திரமான வாணிபம் ஏற்படுத்துவதால் அதிகப்படியான நிதிவளங்களைப் பயன்படுத்தி செல்வந்தர்கள் செழிக்கின்றனர். ஆனால் வறியவர்கள் பாதிக்கின்றனர்.

13) உலகமயமாக்கலில் அடிப்படை சித்தாந்தம் கூட்டு லாபமாகும். தொழில் துவங்குதில் மட்டும் இதை வளர்ந்த நாடுகள் மேற்கொள்கின்றன. பின் அந்த நாடுகள் சட்டச் சீர்திருத்தம் செய்யப்பட்டு அவைகளைப் பயன்படுத்தி வளரும் நாடுகளைப் பெரிதும் பாதிக்கச் செய்கின்றனர்.

14) உலகமயமாக்கலில் சர்வதிகாரப் போக்கில் செயல்படுகிறது. வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளில் முதலீடு செய்ய முயல்வது மேலும் சேமிப்பைத் தங்கள் நாடுகளில் மேற்கொள்ள வேண்டும் என்று நிர்பந்தம் செய்வது ஆகியவை நடைபெறுகிறது.

15) சில அறிஞர்கள் கருத்துப்படி உலகமயமாக்கல் என்பது வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளுக்கு கடன் – கொடுத்து தொடர்ந்து கடனிலேயே வாழ வைக்க துணிந்த செயல் இது என்கிறார்கள்.

16) உலக அரசியலில், நாடுகளின் சுதந்திரம் குறிப்பாக வளரும் நாடுகளில் அரசியல் பெரிதும் பாதிக்கிறது.

17) உலகமயமாக்கலை உலகளவில் வளரும் நாடுகள் பெரும்பாலும் எதிர்க்கின்றன. பன்னாட்டு குடிப்பெயர்வு, பன்னாட்டு நிறுவனங்களின் ஆக்கிரமிப்பு போன்றவற்றை மக்கள் எதிர்க்கின்றனர்.

16

Scanned with CamScanner